# சித்தர் இலக்கியங்களில் அறிவியல்

38

**பேரா.சே.ஜாஸ்மின் ஷிஃபானா,**

**உதவிப்பேராசிரியை,தமிழ்த்துறை,**

**ஹாஜி கருத்த ராவுத்தர் ஹெவுதியா கல்லூரி (தன்னாட்சி)**

**உத்தமபாளையம்,**

**தேனி மாவட்டம்.**

**ஆய்வுச் சுருக்கம்:-**

சித்தர்கள் உருவ வழிபாட்டை பற்றி ஆழமாக சிந்திக்க கற்றுக்கொடுத்தார்கள். அன்பு, கருணை, பண்பு, மனித நேயம், பரிவு, போன்றவற்றை வலியுறுத்தினார்கள். இயற்கையின் மூலம் கிடைக்கும் பொருட்களைக் கொண்டு, உடல் ரீதியான நோய்களைத் தீர்த்தார்கள். அதுமட்டுமின்றி, பல அறிவியல் உண்மைகளையும் கற்றுத் தெளிந்திருந்தனர் அவற்றை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச் சொற்கள்:-** சித்தர்கள் – சிந்தை / அறிவு உடையவர்களே சித்தர்கள். சித்தி-யோகம்.

**முன்னுரை:-**

விஞ்ஞான நுட்பங்களை நன்கு தேர்ந்து, ஆய்வுகள் பல மேற்கொண்டு, முன்னேறியுள்ள வெளிநாடுகளில் மனதையும் உயிரியல் இயக்கத்தையும், உடற்கூற்று இயல்புகளோடு இணைந்து ஆராய்ந்து வருகின்றார். ஆனால், சித்தர்களோடு பலநூறு ஆண்டுகளுக்கு முன்பே இத்தகைய அறிவியல் கருத்துக்களைத் தம் பாடல்களிலேயே கூறியுள்ளதை அத்தகைய சித்தர்களின் அறிவியல் கருத்துகளை ஆராய விளைவதே இக்கட்டுரையாகும்.

**“சித்தரின் அறிவியல் சிந்தனைகள்”:-**

**குதம்பைச் சித்தர்:-**

இவருடைய பாடல்களில் இலக்கியப் பண்போடு கூறிய அறிவியல் கருத்துகளை உள்ளடக்கியதாக காணப்படுகின்றன. இதனை

**“மாய்காய் பாலுண்டு மலைமேலிருப்பார்க்குத்**
**தேங்காய்ப்பால் ஏதுக்கடி-குதும்பை**
**தேங்காய்ப்பால் ஏதுக்கடி”**

என்ற பாடலில் காணலாம். இப்பாடலிலே ஐம்புலன்கள் ஞான ஒருமையிலே சேர்ந்து சுரக்கின்ற ஞானப் பாலை மாங்காய்பால் என்று கூறுவர். இந்த உடம்பிலுள்ள அறிவுக்கு ஆதாரமான சுரப்பிகளை வகைப்படுத்திக் கூறியுள்ள சித்தர்கள் அவற்றின் வடிவத்தையும் வருணித்துக் கூறியுள்ளனர். ஆனந்தமான ஞானப்பாலைச் சுரக்கின்ற சுரப்பியின் வடிவம் மாவடுவைப் போன்றதாகும். உடலுறுப்புகளை ஆராய்ந்து கண்டு, மாங்காயின் வடிவத்திலுள்ள சுரப்பிகளாகிய அங்கங்களைப் பற்றி எடுத்துக் கூறியிருக்கிறார்கள். சித்தர்களுடைய யோகப் பயிற்சியினால் ஐம்புலன் அடக்கம் கைவந்து, ஒரு ஞானிக்கு மலை முகடாகிய தலை உச்சியிலே மாங்காய் வடிவத்திலுள்ள சுரப்பியிலிருந்து ஞானப்பால் சுரக்கிறது என்பதை விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.





**திருமூலர்:-**

திருமூலர் “லென்ஸ்” என்ற பூதக்கண்ணாடியைத் தன் பாடலில் “சூரியகாந்தம்” என்று குறிப்பிடுகிறார். தமிழகத்தில் இதை சூரியகாந்தக் கல் என்றும் குறிப்பிடுவர். இந்த லென்ஸ் என்கிற பூதக் கண்ணாடி கொண்டு ஒரு பேருண்மையை விளக்குகிறார் திருமூலர். அவர் தம் பாடலில்,

**“சூரிய காந்தமும் சூழ்பக்கம் போலவாம்**
**சூரிய காந்தமோ சூழ்பஞ்சைச் சுட்டிடா**
**சூரியன் சந்நதியிற்சுடு மாறுபோல்**
**சூரியன் தோற்றமுன் அற்ற மலங்களே” –** என்று குறிப்பிடுகிறார்.

இப்பாடலில் பூதக்கண்ணாடியும் பஞ்சும் ஒன்றாக இருந்தால் பஞ்சு தீப்பிடிப்பதில்லை. ஆனால் அந்தப் பஞ்சை நோக்கி வெயிலின் கதிர்கள் பூதக்கண்ணாடி வழியாகக் குவித்துப் படியுமாறு சூரியனுக்கு எதிரே பிடித்தால், பஞ்சில் தீப்பற்றிக் கொள்கிறது. இந்த விஞ்ஞான அறிவியல் உண்மையை விளக்குகிறார் திருமூலர்.

**இடைக்காலச் சித்தர்:-**

நெருப்பினால் பஞ்சுப் பொதி அழிவது பாவங்கள் எல்லாம் நம் அறிவினாலே அழிக்க வேண்டும் என்பதனை

“அக்கினியாற் பஞ்சுபொதி அழிந்திட்டவாறே போல்
பக்குவ நல் அறிவாலே பாவம்போல் மடவனமே”

என்ற பாடலில் குறிப்பிடுகிறார்.

**அகப்பேய்ச் சித்தர்-**

வானவெளியில் நிலை கொண்டு நிற்பது பராபரம். அந்த பராபரம் தான் சடலமாகவும், சமுத்திரமாகவும் உருவானது. இந்த உலகமும் அதிலுள்ள கிரகங்களும் பராபரத்தினால் உண்டானவை. விஞ்ஞானிகள் 96 மூலங்கள் ஆதாரமானவை என்று கூறுகின்றனர். சித்தர்கள் குறிப்பிடுகின்ற பஞ்ச பூதங்கள் இந்த மூலங்களில் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்டவையோ சேர்ந்து உருவானவை தான். சித்தர்கள் பொருளின் தன்மை கொண்டு ஐந்தாகப் பிரித்ததை விஞ்ஞானிகள் அணுவின் தன்மையினை ஒட்டி 96 வகைகள் எனப் பிரித்தார்கள். எனவே படைப்பு என்பது பரபிரம்மத்தின் தற்செயல் என்பது சித்தர்களின் முடிவு. பரப்பிரம்மம் தன்னைத் தானே மாயா சொரூபம் ஆக்கிக் கொண்டபோது உலகம் தோன்றிற்று உயிர்கள் தோன்றின. இதனையே அகப்பேயச் சித்தர்,

**“பராபரமானதடி அகப்பேய்**
**பரவையாய் வந்ததடி**
**தராதலம் ஏழ்புவியும் அகப்பேய்**
**தானே படைத்ததடி”** என்று பாடுகிறார்.

இவர் மேலும் ஒரு பாடலில்,

**“ஒன்றோடு ஒன்று கூடில்**
**ஒன்றுங் கெடுங்கானே**
**நின்ற பரமசிவமும்**

**நில்லாது கண்டாயே…"** என்று பாடுகிறார்.

இதற்கு விஞ்ஞான ரீதியான விளக்கம் அளிக்க முடியும். ஆக்சிஜன் ஒரு மூலப்பொருள். ஹைட்ரஜன் மற்றொரு மூலப்பொருள். ஹைட்ரஜன் தானே தீப்பிடித்து எரியும் தன்மையது. ஆக்சிஜன் எரிவதற்குத் துணை நிற்கின்ற வாயு. ஆனால், இரண்டு பங்கு ஹைட்ரஜனும், ஒரு பங்கு ஆக்சிஜனும் இணைகின்ற போது தண்ணீர் என்கிற பொருள் கிடைக்கிறது. இந்தத் தண்ணீர் நெருப்பை அணைக்கக் கூடியது.

இந் உடலானது துன்பத்திற்குக் கலசமாக விளங்குகிறது என்று கூறி, உடலின் ஒலி, ஒளி உணர்வுகளை உணர்த்துகிறார் இவர்.

**"விந்து நாதமடி – அகப்பேய்**
**மெய்யாக வந்ததடி**
**ஐந்து பெரும்பூதம்- அகப்பேய்**
**அதனடிமை ஆனதடி"**-என்று பாடுகிறார்.

இதனால், உடம்பு இடும்பைக்கு இலக்கணம். இவ்வுடலுக்கு ஒன்பது துளைகள் உள்ளன. அவ்வொன்பதும் நீர்ச்சால் என்று சித்தர்கள் குறிக்கின்றனர். ஊனக் கண்ணுக்குத் தெரியாமல் உள்ளத்தின் கண்ணுக்குத் தெரிவது ஒளி அனுபவமாகும். இவ்வாறே ஒலி உடலிருந்து அதுவே உறுப்பில் நின்று இழிதகும் உள்ளத்து ஓசை என்கிறார்கள் சித்தர்கள்.

உட்சுவாசமில்லாத மயிர்க்கால்கள் வழியாக நாசமாகின்ற பிராணத்திற்குக் காரணமான இடக்கலை, பிங்கலைகளை முற்றிலும் முகத்தின் முன் தோன்றும் பிரணவ மலத்தினுள்ளே நுழைந்துவிடும் என்றும், அப்போது ஒளி தோன்றும் என்றும் சித்தர்கள் கூறுகின்றனர்.

திருவருள் அற்புதம் என்ற பதிகத்தில் பொற்ற சடையில் தமக்கேற்பட்ட ஒளி அனுபவங்களைத் தான் கண்ட காட்சியாக விளக்குகின்றார் இராமலிங்க அடிகளார்.

காகபுஜண்டர்:-

இவர் தன் பாடலில் அண்டவெளி குறித்து தெளிவாகக் குறிப்பிடுகிறார். பொதுவாக சித்தர்கள் வானவியல் அறிவு பெற்றிருந்ததைக் காணமுடிகிறது.

**"தூசி என்ற வெளியல்லோ அண்டவீதி**
**சொக்காமல் கிரிக்கொண்டே ஆக்கியேரே"** என்று குறிப்பிடுகின்றார். மேலும்,

அவர்,

**"வேர்கண்ட வாயிரத் தெட்டண்ட கூட**
**வீதி எல்லாமோர் நொடிக்குள் விரைந்து சென்றேன்".**

என்று தன் உபநிடத பாடலில் வீதி என்று குறிப்பிடுவது "பால்வீதி" ஆகும்.

**மருந்து உண்ணும் போது சேர்க்கும் பொருள்கள்:-**

மருந்து உண்ணும் போது சில பொருட்களை உடன் சேர்த்துக் கொள்வர். அப்படி சேர்த்துக் கொள்ளும் பொருட்கள் மருந்துக்குத் துணையாகவும், உணவுப் பொருளாகவும் அமைந்து விடும். அவ்விதம் அமைந்த மருந்துகள் நோயைப் போக்கும் வல்லமை கொண்டதாக அமையாது. மேலும், அம்மருந்தின் குற்றத்தை நீக்கவும் வழி அறிந்திருந்தார்கள் சித்தர்கள்.

இரும்பு முதலிய உலோகங்கள் ஆகிய பற்பம், செந்தூரம், மாத்திரை என்னும் இவைகளால் நேர்ந்த தோஷங்களுக்கு அயப்பற்பம் இவைகளாலும்.

பாஷாண பற்பம் செந்தூரம் மாத்திரை என்னும் இவற்றால் நேர்ந்தவற்றிற்கு லவன செந்தூரம் முதலியானவைகளாலும்,

**“மற்றை சரக்குகளால் நேர்ந்த தோஷங்களுக்கு மிளகுக் குடிநீராலும்,**

**அனுபான திரவியங்களால் நேர்ந்த இஞ்சிச் சாரினாலும்,**

**குடிநீர் வகையால் நேர்ந்த தோஷங்களுக்கு உத்ராமணி சமூக சாற்றினாலும்,**

**பாவங்களால் நேர்ந்த தோஷங்களுக்கு தேடினாலும் நிவாரணம் உண்டாம்”.**

**திருமூலர்:-**

இவ்வுடம்பு பருமை நன்மை என்னும் மூவகையால் அமைந்தது. மெய்யுணர்வு வழியில் இதனைப் பழக்கினால், உயிர் வளரும் என்கிறார்கள் சித்தர்கள். அவர்தம் பாடல்களில்,

**“உடம்பை வளர்க்கும் உபாயமறிந்தே**

**உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே”.**

**“உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பே ஆலயம்”.**

நம் உடல் என்பது இறைவன் வாழும் ஆலயம். எனவே, நாம் நம் உடல் நலத்தைக் காக்க நல்ல பழக்க வழக்கங்களைக் கடைபிடித்து ஆரோக்கியமான வாழ்வினை மேற்கொள்ள வேண்டும்.

**முடிவுரை:-**

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சித்தர்கள் இந்த உடலையும், உள்ளத்தையும் உயிரையும் ஆராய்ந்து கண்டு இலக்கியங்களிலே கூறிய பாங்கு போற்றத்தக்கது. விஞ்ஞானமும், மெய்ஞானமும் அவர்தம் பாடல்களிலே காணப்படுகின்றது. உடம்பினை அறிவியல் கண்கொண்டு ஆராய்ந்த பின்னரே மெய்ஞான வழியினை பற்றிக் கூறியுள்ளதை இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது.

**பார்வை நூல்கள்:-**


1. சித்தர் கண்ட விஞ்ஞானம்-தத்துவம் சாமி சிதம்பரனார்.
2. அகத்தியர் ஞானப் பாடல்கள்.
3. தமிழ் சித்தர் இலக்கியம்-நிர்மலா மோகன்
4. ராஜ வைத்தியம் மகுடம் என்னும் தேரையர் அருளிச் செய்தயமக வெண்பா.
5. திருமந்திரம்.